Daily Thanhi Next
FUND DETAILS
Edition: Chennai Date: 01/08/2016 Page no: 6 Clip size: H: 14 cm / W: 13 cm

India Media Monitor

# நிதி நிலை முடிவுகள்

இந்திய நிறுவனங்கள் நிதி நிலை முடிவுகளை வெளியிட்டு வருகின்றன. முன்னணி நிறுவனங்களின் வருவாய் மற்றும் லாப வளர்ச்சி பற்றிய புள்ளிவிவரங்கள் வருமாறு:-

## நோவார்டிஸ் இந்தியா

நோவார்டிஸ் இந்தியா நிறுவனம், ஏப்ரல்-ஜூன் காலாண்டில், தனிப்பட்ட முறையில் ரூ.19 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.13 கோடியாக இருந்தது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் தனிப்பட்ட செயல்பாட்டு வருவாய் ரூ.171 கோடியாக உள்ளது.

## எய்ஷர் மோட்டார்ஸ்

எய்ஷர் மோட்டார்ஸ் நிறுவனம், ஏப்ரல்-ஜூன் காலாண்டில், ஒட்டுமொத்த அளவில் ரூ.376 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.237 கோடியாக இருந்தது. ஆக, நிகர லாபம் 59 சதவீதம் உயர்ந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயல்பாட்டு வருவாய் ரூ.1,556 கோடியாக அதிகரித்துள்ளது.

## கிளாக்சோ ஸ்மித்கிளைன்

கிளாக்சோ ஸ்மித்கிளைன் பார்மாசூட்டிக்கல்ஸ் (ஜி.எஸ்.கே. பார்மா) நிறுவனம், ஏப்ரல்-ஜூன் காலாண்டில், தனிப்பட்ட முறையில் ரூ.72 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.94 கோடியாக இருந்தது. ஆக, நிகர லாபம் 23 சதவீதம் சரிந்துள்ளது. எனினும், இந்நிறுவனத்தின் தனிப்பட்ட செயல்பாட்டு வருவாய் ரூ.705 கோடியாக அதிகரித்துள்ளது.

## பி.வி.ஆர்.

பி.வி.ஆர். நிறுவனம், நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்-ஜூன்) ரூ.43.20 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.43.50 கோடி நிகர லாபம் ஈட்டி இருந்தது. ஆக, நிகர லாபம் 0.70 சதவீதம் குறைந்துள்ளது. இதே காலத்தில் இந்நிறுவனத்தின் நிகர வருவாய் 17 சதவீதம் உயர்ந்து ரூ.570 கோடியாக அதிகரித்துள்ளது.

## எஸ்கார்ட்ஸ்

எஸ்கார்ட்ஸ் நிறுவனம், ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் ரூ.47 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.35 கோடியாக இருந்தது. ஆக, லாபம் 33 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்நிறுவனத்தின் வருவாய் 9 சதவீதம் உயர்ந்து ரூ.1,051 கோடியாக அதிகரித்துள்ளது.

## சோழமண்டலம் பைனான்ஸ்

சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு பைனான்ஸ் நிறுவனம், நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்-ஜூன்) ஒட்டுமொத்த அளவில் 50 சதவீத வளர்ச்சியுடன் ரூ.167 கோடி நிகர லாபம் ஈட்டி உள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டில் அது ரூ.111 கோடியாக இருந்தது.

இதே காலத்தில் இந்நிறுவனத்தின் மொத்த செயல்பாட்டு வருவாய் ரூ.1,115 கோடியாக உயர்ந்துள்ளது. கடன் பட்டுவாடா 30 சதவீதம் உயர்ந்து ரூ.4,561 கோடியாக அதிகரித்துள்ளது.